

தமிழ்நாடு தமிலநாடு TAMILNADU

10.6.2025 FP 236333

M/s MARS Property developers
R. பகவதி, N. ராஜராஜேஸ்வரி, அக்பர் அலி & ஷரிஹத் நிஷா
சர்வே எண் 83/2, 83/3, 84/1, 84/2, 85/1 மார்ஸ் சிட்டி
நாகப்பட்டினம்

P.சாவித்திரி, B.Sc., B.L.
வழக்கறிஞர்
L.No. 5/2000 போன்: 244311
செல்: 94436 65649

உறுதிமொழிப் பத்திரம் (AFFIDAVIT)

நான், M/S, மார்ஸ் பிராப்பர்ட்டி டெவலப்பர்கள் (R.பகவதி, N. ராஜராஜேஸ்வரி, அக்பர் அலி & ஷரிஹத் நிஷா) & சுப்ரமணியன், சர்வே எண்: 83/2, 83/3, 84/1, 84/2, 85/1 (மார்ஸ் சிட்டி) பொரவச்சேரி கிராமம் & பஞ்சாயத்து, நாகப்பட்டினம் தாலுகா & மாவட்டம், தமிழ்நாடு மாநிலம், இந்தியா. இத்தால் கீழ்க்கண்டவாறு உறுதியளிக்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் **நி.மு.e /2553/2025/U3**, நாள் **22.09.2025**-இல் வழங்கப்பட்ட தடையின்மைச் சான்றிதழில் (NOC) குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக ஏற்று, அவற்றிற்கு உட்பட்டு மட்டுமே லேஅவுட் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வேன் என உறுதியளிக்கிறேன்.

PARTNER
N. ராஜராஜேஸ்வரி
A. சுப்ரமணியன்
R. Bhagavathi
M. Yethikaai
MARS PROPERTY DEVELOPERS
V. Subram

குறிப்பாக,

வெள்ளக் காலங்களில் பாதிப்பு ஏற்படாத வகையில் NOC-ல் குறிப்பிடப்பட்ட உயரத்திற்கு மண் நிரப்புதல் மேற்கொள்ளப்படும்.

நீர்வளத்துறைக்கு சொந்தமான வாய்க்கால் மற்றும் வடிகால் புறம்போக்கு நிலங்கள் எதுவும் ஆக்கிரமிக்கப்படமாட்டாது.

மின்கம்பிகள் மற்றும் உயர் மின்னழுத்த பாதைகள் தொடர்பாக தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து தேவையான அனுமதிகள் பெறப்படும்.

பாசன வாய்க்கால்களின் இயல்பான அகலம் மற்றும் ஓட்டம் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படும்.

வாய்க்கால்களின் நீரோட்டத்திற்கு எந்தவித தடையும் ஏற்படுத்தப்படமாட்டாது.

கழிவுநீர் அல்லது சாக்கடை நீர் எக்காரணம் கொண்டும் வாய்க்கால்களில் வெளியேற்றப்படமாட்டாது.

மழைநீர் தேங்காத வகையில் உரிய வடிகால் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

திடக்கழிவு, குப்பை மற்றும் சாக்கடை நீர் அகற்றுவதற்கான உரிய உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.

நீர்வளத்துறையின் ஆறு, வாய்க்கால் மற்றும் வடிகால் அமைப்புகள் சேதமடையாதவாறு பராமரிக்கப்படும்.

வருவாய்த் துறையின் பதிவுகளின்படி வாய்க்கால் பரப்பளவு பாதுகாக்கப்படும்.

நீர்வளத்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்ளும்போது முழு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

PARTNER

MARS PROPERTY DEVELOPERS

வாய்க்கால் கரைகள் மற்றும் நீர்வழிப்பாதைகள் சீரமைக்கப்பட்டு பராமரிக்கப்படும்.

NOC வழங்கப்பட்ட நிலப்பகுதியைத் தவிர வேறு எந்த நிலத்தையும் இந்த அனுமதியின் கீழ் பயன்படுத்தமாட்டேன்.

துறையின் முன் அனுமதி பெறாமல் வாய்க்கால்களின் குறுக்கே அல்லது இடையில் பாலம் அமைக்கமாட்டேன்.

வருவாய்த் துறை மூலம் நில அளவீடு செய்து எல்லைக் கற்கள் நிறுவப்படும்.

கட்டிட வடிவமைப்பு மற்றும் அதன் உறுதித்தன்மைக்கான முழுப் பொறுப்பையும் நானே ஏற்றுக்கொள்கிறேன்.

DTCP வழிகாட்டுதலின்படி பாசன வாய்க்கால் கரையோரத்தில் மனைகள் அமைக்காமல், சாலை அல்லது திறந்த வெளி இடங்கள் மட்டுமே அமைக்கப்படும்.

வாய்க்காலில் பாலம் அமைக்க வேண்டியிருந்தால், நீர்வளத்துறையிடமிருந்து தனியாக அனுமதி பெறப்படும்.

சொத்து தொடர்பான வழக்கு, உரிமைத் தகராறு அல்லது பிற சட்டப்பிரச்சினைகள் ஏற்பட்டால், அதற்கான முழுப் பொறுப்பும் என்னுடையதாகும்.

மேற்கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை மீறினால், வழங்கப்பட்ட NOC மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட அனுமதிகள் ரத்து செய்யப்படலாம் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

PARTNER

M. Yathlai L. [illegible]

N. [illegible] A. [illegible]

MARS PROPERTY DEVELOPERS

V. Subramani

மேற்கூறிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்பு, சேதம், கோரிக்கை, உரிமைக் கோரல், செலவு, நடவடிக்கை, வழக்கு நடவடிக்கை மற்றும் பிற விளைவுகளிலிருந்தும், இத்திட்டத்தில் எதிர்காலத்தில் ஒதுக்கீடு பெறவுள்ளவர்களுக்கு இழப்பீடு வழங்கி அவர்களை பாதுகாப்பதற்கு நாங்கள் இதன்மூலம் உறுதியளித்து ஒப்புக்கொள்கிறோம்.

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், அவற்றை முழுமையாகக் கடைப்பிடிப்பேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் : நாகப்பட்டினம்

தேதி : 10/06/2026

உறுதியளிப்பவர்கள்

PARTNER

M. Yathlai V. Subram

N.

MARS PROPERTY DEVELOPERS

A.